(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 64.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2016 ஏப்பிறல் 07, வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

58/ ’15

1.

கௌரவ புத்திக பத்திறண,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வட மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் அரசாங்க செலவில் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வெளிநாட்டு விஜயங்களில் கலந்துகொண்ட உறுப்பினர் களின் எண்ணிக்கையும், இவர்களது பெயர்களும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உறுப்பினர்களின் வெளிநாட்டு விஜயங்களுக்காக மாகாண சபை செலவிட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு உறுப்பினர் சார்பிலும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி உறுப்பினர்களின் வெளிநாட்டு விஜயங்களுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி விஜயங்களின் மூலம் நாட்டுக்கு கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) உறுப்பினர்களுக்கு மேலதிகமாக மாகாணசபையின் செலவில் வேறு நபர்களின் வெளிநாட்டு விஜயங்களில் கலந்துகொண்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களது பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நபர்கள் வெளிநாடு செல்வதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலமாக நாட்டுக்கு கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

228/ ’15

2.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவை இந்நாட்டுக்கு பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்கூட்டிய பிரச்சார மற்றும் ஏனைய பணிகளுக்காக கடந்த அரசாங்கத்தின் இடையீட்டுடன் சேகரித்துள்ள பணம் எவ்வளவு;

(ii) மேற்படி பணம் முறையற்றவகையில் பாவிக்கப்பட்டுள்ளதா;

(iii) இந்த விளையாட்டு விழாவை இலங்கைக்கு பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் CWG Hambanthota 2018 (Pvt.) Ltd. எனும் கம்பனியொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததா;

(iv) இந்த கம்பனியின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு இலக்கம் யாது;

(v) அக்கம்பனிக்கு விளையாட்டுத்துறை அமைச்சினால் வழங்கப்பட்ட பணத்தொகை யாது;

(vi) அதற்கு மேலதிகமாக பணம் வழங்கிய ஏனைய நிறுவனங்கள் மற்றும் ஆட்களின் பெயர்கள் யாவை;

(vii) மேலே குறிப்பிடப்பட்டவர்களால் வழங்கப்பட்ட பணம் மற்றும் காசோலைகளின் பற்றுச்சீட்டுகள் அல்லது காசோலை இலக்கங்கள் தனித்தனியாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பணம் வங்கியிலிடப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக உள்ள ஆவணங்கள் யாவை;

(ii) வங்கியிலிடப்பட்டிராத பணக் கிடைப்பனவுகளை பற்றுச்சீட்டு இலக்கங்களுடன் சமர்ப்பிப்பாரா;

(iii) பணம் வங்கியிலிடப்படாமைக்கான காரணங்கள் யாவை; மேற்படி பணம் எவருடைய பொறுப்பில் உள்ளது;

(iv) சேகரிக்கப்பட்ட மொத்தப் பணத்தில் தற்போது கணக்கில் எஞ்சியுள்ள தொகை எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

280/ ’15

3.

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மீதொட்டமுல்லை குப்பை மேட்டை அகற்ற நடவடிக்கை எடுப்பாரா;

(ii) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்ட மீதொட்டமுல்லை குப்பை மேட்டை மீள்சுழற்சிப்படுத்தும் வேலைத்திட்டத்துக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) இதற்காக வழங்கப்படும் அரச தலையீடு யாது;

(iv) இந்த மீள்சுழற்சி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மீள்சுழற்சி வேலைத்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் கொழும்பு நகர கழிவுகள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுமா;

(ii) ஆமெனில், இரண்டாம் கட்டத்தின் கீழ் மீதொட்டமுல்லை குப்பை மேட்டிலுள்ள கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுமா;

(iii) மேற்படி குப்பை மேட்டின் காரணமாக பாதிப்புக்குள்ளாகியிருக்கும் குப்பை மேட்டுக்கு பக்கத்தில் வசிக்கும் பொது மக்களுக்கு நியாயம் வழங்க கொழும்பு மாநகர சபையுடன் சேர்ந்து வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், இது தொடர்பான விபரமான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

323/ ’15

4.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்நாட்டில் தற்சமயம் இனங்காணப்பட்டுள்ள தெலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இந்நோயாளர்கள் மாவட்ட அடிப்படையில் பரந்து காணப்படும் விதம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004.07.02 ஆம் திகதி அப்போதைய பிரதி சுகாதார அமைச்சரின் தலைமையில் சுகாதார அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றில் எண்புமச்ச ஸ்டேம் கலங்கள் பொருத்தும் மத்திய நிலையமொன்றை குருணாகல் போதனா வைத்தியசாலையில் நிர்மாணிப்பதற்கு இணங்கப்பட்டதென்பதையும்;

(ii) இதற்கென வடமேல் மாகாண சுகாதார அமைச்சினால் ரூபா 100 இலட்சம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி எண்புமச்ச பொருத்துதலுக்காக பயிற்றப்பட்ட மருத்துவர்கள் அரசாங்க வைத்தியசாலைகளில் உள்ளனரென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) இந்நாட்டில் தனியார் வைத்தியாசாலையொன்றில் எண்புமச்ச ஸ்டேம் கலம் பொருத்துதலை மேற்கொண்டு தெலசீமியா நோயாளர்கள் குணப்படுத்தப் பட்டுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இற்றைவரை எண்புமச்ச ஸ்டேம் கலங்களை பொருத்தும் மத்திய நிலையமொன்றை குருணாகல் போதனா வைத்தியாசாலையில் அல்லது ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியாசாலையில் அல்லது பிறிதொரு அரசாங்க வைத்தியசாலையில் நிறுவாதிருப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) தெலசீமியா நோயாளர்களுக்கு தற்போது காணப்படும் மிகச் சிறந்த சிகிச்சை முறையொன்றான ஸ்டேம் கலங்கள் பொருத்துதலை அரசாங்க வைத்தியசாலைகளில் மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

345/ '15

5.

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ள மற்றும் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ள தோட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தோட்டங்கள் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தோட்டங்களில்,

(i) மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மண்சரிவு காரணமாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

ஒவ்வொரு தோட்டத்தின்படி தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

362/ ' 15

6.

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்களின் மூலம் அமுல்படுத்தப்பட்ட பிரதான வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களில் வெளிநாட்டு நிதியங்கள் மற்றும் உள்நாட்டு நிதியங்கள் மூலம் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்த கருத்திட்டங்களைக் கண்காணிப்பதற்காக கருத்திட்ட ஒப்படைப்பு அடிப்படையில் ஆலோசகர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆலோசகர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி ஆலோசகர்களுக்கு இருக்க வேண்டிய தொழில்சார் மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) இவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்த சம்பளம் மற்றும் வேறு கொடுப்பனவுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) மேற்படி சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக அரசாங்கத்தினால் வருடாந்தம் செலவிடப்பட்ட மொத்தத் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

425/ ' 16

7.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஜே. ஆர். ஜயவர்தன அவர்கள், சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் மற்றும் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் சனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற திகதிகளும் இவர்களுக்கு ஓய்வு பெற்ற சனாதிபதியொருவருக்குரிய உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட்ட திகதிகளும் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) ஆர். பிரேமதாஸ அவர்கள் உயிரிழந்த திகதி மற்றும் இவருடைய பாரியாருக்கு ஓய்வுபெற்ற சனாதிபதி ஒருவருக்குரிய உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட்ட திகதி யாவை என்பதையும்;

(iii) மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு மாத்திரம் உத்தியோகபூர்வ இல்லம் வழங்குவதில் நியாயமின்றி தாமதமேற்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iv) அவ்வாறு உத்தியோகபூர்வ இல்லம் வழங்குவதில் அசாதாரணமான முறையில் தாமதமேற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

77/ ' 15

8.

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014.07.01 ஆம் திகதி முதல் இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள உணவுச் சுவையூட்டிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு சுவையூட்டிக்கும் தடைவிதிக்கப்படுவதற்கான காரணம் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தடைசெய்யப்பட்ட சுவையூட்டிகள் போன்றே அஜினமொட்டோ அல்லது மொனோசோடியம் க்ளூடமேட் (MSG) சுவையூட்டியும் மனித உடலுக்கு பாதகமானதென்பதையும்;

(ii) இது புற்றுநோய் மற்றும் நரம்பு நோய்கள் உள்ளிட்ட பாரதூரமான நோய்களுக்கு காரணமாக அமைகின்றதென்பதையும்;

(iii) ஒரு வருடத்தில் 2200 மெட்ரிக் தொன்னை விட அதிகளவில் மேற்படி சுவையூட்டி இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மொனோசோடியம் க்ளூடமேட் பாவனையை தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

324/ ’15

9.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாலம்பே SAITM தனியார் மருத்துவ பட்டம் வழங்கும் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) தற்போது அங்கு கல்வி பயிலும் மாணவர் குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு மாணவர் குழுவிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி மாணவர்கள் குறித்த நிறுவனத்துக்கு தகுதி பெறுவதற்காக க.பொ.த. (உயர்தர) அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் சித்தியடைந்த ஆண்டு, பாடத்துறை, மேற்படி பரீட்சையின் பெறுபேறு, “Z” புள்ளிபெறுமதி மற்றும் பரீட்சை இலக்கம் ஒவ்வொரு மாணவர் தொடர்பிலும் தனித்தனியே யாது என்பதையும்;

(v) மேற்படி நிறுவனத்தில் தற்போது உள்ள நிரந்தர விரிவுரையாளர் குழு அங்கத்தவர்களின் பெயர்கள், அவர்களின் கல்வித் தகைமைகள், அவர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திணைக்களங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

346/ ’15

10.

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுநலவாய அரசுத் தலைவர்களின் மாநாட்டு (CHOGM) க்கு இணையாக சூரியவெவ பிரதேசத்தில் டென்னிஸ் மைதானமொன்றை அமைக்க திட்டமிடப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென தெரிவுசெய்யப்பட்ட காணியின் உரிமையாளர் யார் என்பதையும்;

(iii) மேற்படி காணிக்கென இதுவரை செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு ஒரு தனியாருக்குச் சொந்தமான காணிக்கு எந்த அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(v) மேற்படி காணிக்கான விலைமதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(vi) மேற்படி டென்னிஸ் மைதான நிர்மாணப் பணிகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(vii) அதன் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(viii) இன்றேல், செலுத்தப்பட்ட பணத்தை மீளப்பெற நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 சனவரி 14ஆம் திகதியளவில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள தரைப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் சேவையைச் சேர்ந்த ஆளணியினர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) 2016 சனவரி 14ஆம் திகதியளவில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் அல்லாத ஏனைய சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள தரைப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் சேவையைச் சேர்ந்த ஆளணியினர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேலே (i) இன் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பிரகீத் எக்னெலிகொட எனும் ஆளொருவர் காணாமற்போனமையுடன் தொடர்புடையவர்களென குற்றம் சாட்டப்பட்டு, கைதுசெய்யப்பட்டுள்ள இராணுவ ஆளணியினர்களுக்கு, பொலிஸாரினால் தயாரிக்கப்பட்ட போலியான விடயங்கள் உள்ளடக்கிய கூற்றுகளில் கையொப்பமிடுமாறு, சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலவந்தப்படுத்துவதாக, நீதிமன்றத்துக்கும் பொலிஸ் மாஅதிபருக்கும் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளமையை அவர் அறிவாரா;

(ii) அவ்வாறு போலியான கூற்றுக்களில் கையொப்பமிடுமாறு பலவந்தப் படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் பொலிசார் புலனாய்வுகளை ஆரம்பித்துள்ளதா;

(iii) மேற் குறிப்பிட்ட புலனாய்வுகளின் முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 1.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2016, மே மாதம் 03 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

3.

கௌரவ கே. காதர் மஸ்தான்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யாவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்படுத்துவதற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கம் கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்படுத்துவதற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியதும், 34 ஆம் வாசகத்தின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 சனவரி 18 ஆந் திகதிய 1950/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றின் மூலம் திருத்தப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் 3ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 பெப்புருவரி 11 ஆம் திகதிய 1953/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றின் மூலம் திருத்தப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் 3ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 பெப்புருவரி 11 ஆம் திகதிய 1953/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

தகவலுக்கான உரிமை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

நுண்நிதியளிப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

ஆட்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1954/34 ஆம் இலக்க 2016 பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 41 ஆவது பிரின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சினால் ஆக்கப்பட்டு, 2013 சனவரி மாதம் 15 ஆம் திகதிய, 1793/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கங்களின் கட்டளையின் 13 மற்றும் 17 ஆம் பிரிவுகள் திருத்தப்பட்டு 2015 நவம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1940/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஈ பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 22 ஆந் திகதிய 1946/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2016.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

நிதி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை - தலைப்பு 240 - நிகழ்ச்சித் திட்டம் 2,— †இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திற்குப் புறம்பாக அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் பெறப்பட்ட கடன் தொகையிலிருந்து 2016 சனவரி மாதம் 1 ஆம் திகதியுடன் ஆரம்பமாகி 2016 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டின் பயன்பாட்டிற்காக ஐம்பத்தைந்து மில்லியன் ரூபாவை (ரூபா. 55,000,000) விஞ்சாத தொகையொன்றினை அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு தயார்படுத்திக்கொள்ளல் வேண்டுமாக.

சேவைகள் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

(அ) 2015 நிதியாண்டின் நானாவித நிதியிலிருந்து 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 ஆம் இலக்க முற்பணக் கணக்குகளைத் தீர்த்தல்.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு | 240 | - | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் |
| நிகழ்ச்சித் திட்டம் | 02 | - | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் |
| கருத்திட்டம் | 03 | - | கணக்கீட்டு உதவி |
| | | | மொத்தச் செலவினம் = ரூபா **55,000,000** |
| | | | (ஐம்பத்தைந்து மில்லியன் ரூபா மட்டும்) |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2016 மார்ச்சு மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

* 13.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை அணுசக்தி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் கீழ் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையினால் ஆக்கப்பட்டு 2015 யூலை 21 ஆம் திகதிய 1924/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அணுசக்தி ஒழுங்குவிதிகள் (அனுமதிப் பத்திரம்) மற்றும் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அணு சக்தி (செயன்முறை மேற்கொள்வதற்கான எண்ணம் பற்றிய அறிவித்தல்) ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.